
Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Answers Key:

Maps

1. 

QB365 Study Material QUESTION BANK 365

5 Marks

2. **i). புதிய நிலவுடைமை உரிமைகளால் ஏற்பட்ட பாதிப்புகள் :**
1. இந்தியாவின் மரபு சார்ந்த நிலவுடைமை முறையை ஆங்கிலேயர் சிதைத்தனர்.
2. ஆங்கிலேயருக்கு முந்தைய காலங்களில் நிலவரியானது விவசாயிகளுடன் விளைச்சலைப் பகிர்ந்து கொள்வதாய் அமைந்திருந்தது.
3. ஆனால், ஆங்கிலேயர் பயிர்கள் விளையாமல் போவது, விலைகளில் ஏற்படும் வீழ்ச்சி, வறட்சி, பஞ்சம் போன்ற நிகழ்வுகளைக் கணக்கில் கொள்ளாமல் நிலவரியைப் பணமாகக் கணக்கிட்டு நிர்ணயம் செய்தனர்.
4. கடன் கொடுத்தவர்கள் கடன் வாங்கியவரின் சொத்துகளை அபகரித்தனர்.
5. கிழக்கிந்திய கம்பெனியின் புதிய நில நிர்வாகக் கொள்கை நிலத்தை விற்பனைப் பொருளாக்குவது, வேளாண்மையை வணிகமயமாக்குவது ஆகிய இரண்டையும் நிறுவனமாகவே ஆக்கினர்.
ii) கட்டுப்பாடுகளற்ற வணிகக் கொள்கை :
1. ஆங்கில அரசு கட்டுப்பாடுகளற்ற சுதந்திர வணிகம் எனும் கொள்கையைப் பின்பற்றியது.
2. பருத்தி, சணல், பட்டு ஆகிய கச்சாப் பொருட்கள் இந்தியாவிலிருந்து இங்கிலாந்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன.
3. இக்கச்சாப் பொருட்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மீண்டும் இந்தியச் சந்தைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.
4. இதனால் இந்திய நெசவாளர், தச்சர், கொல்லர், காலணி தயாரிப்போர் ஆகியோர் வேலையற்றோர் ஆயினர்.
iii) பஞ்சங்கள் :
1. 1866 இல் ஒரிசா பஞ்சத்தின்போது ஒன்றரை மில்லியன் மக்கள் பட்டினிக்கு பலியான நிலையில் ஆங்கிலேயர் 200 மில்லியன் பவுண்ட் அரிசியை இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்தனர்.
2. 1833, 1843- ஆண்டுகளில் ஏற்பட்ட பஞ்சங்கள் மக்களை சிலோன், மலேயா, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளுக்கு புலம் பெயர்ந்து செல்லக் கட்டாயப்படுத்தின.
3. மேற்கண்ட சமூக - பொருளாதாரக் காரணிகள் பிரிட்டிஷ் இந்தியாவில் மக்களிடம் தேசிய உணர்வு தோன்றக் காரணமாக அமைந்தன.

3. 1. ஆங்கிலேயர்கள் இனப்பாகுபாட்டுக் கொள்கையை பின்பற்றினார்கள்.
2. அரசு உயர் பதவிகளில் இந்தியர்களைப் பணியமர்த்தாமல் திட்டமிட்டு விலக்கி வைக்கப்பட்டதை மக்கள் இந்திய எதிர்ப்புக் கொள்கையின் நடவடிக்கையாகக் கருதினர்.
3. இந்தியாவின் கற்றறிந்த நடுத்தர வர்க்கம் வைத்த வேண்டுகோளை ஆங்கில அரசு ஏற்றுக் கொள்ள மறுத்தது.
4. அரசுக்கு எதிராக வெறுப்புணர்வைத் தூண்டும் முயற்சிகளை மேற்கொள்வோரை தண்டனைக்குள்ளாக்கும் இந்திய தண்டனைச் சட்டம் - 1870 பிரிவு 124A அடக்குமுறைச் சட்டத்தை இயற்றியது.
5. பத்திரிகைகள் அரசியலை விமர்சனம் செய்யத் தொடங்கின.
6. சம்வத் கௌமுகி 1821 பாரசீக மொழியில் எழுதப்பட்டது.

4. 1. 1875 க்கும் 1885 க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவில் ஆங்கிலேயரின் கொள்கைக்கு எதிராக பல போராட்டங்கள் நடைபெற்றன.
2. 1877 இல் அரசுப் பணிகள் இந்திய மயமாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை ஓங்கி ஒலித்தது.
3. இந்திய தேசிய காங்கிரஸ் "இந்தியா ஒரே நாடு" எனும் கருத்து அவ்வமைப்பின் பெயரில் பிரதிபலித்தது.
4. இந்திய தேசியக் காங்கிரஸ் 1885 டிசம்பர் 28-இல் பம்பாயில் உருவாக்கப்பட்டது.
5. W.C. பானர்ஜி இவ்வமைப்பின் முதல் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார்.
6. இவ்வமைப்பு தேசியவாதம் எனும் கருத்தையும் அறிமுகம் செய்தது.
7. இந்தியரை ஒரே நாடாக ஒருங்கிணைப்பதே இந்திய தேசிய காங்கிரசின் இன்றியமையா நோக்கங்களில் ஒன்றாக இருந்தது.

8. இந்தியர்கள் தாங்கள் அனைவரும் ஒரே நாட்டின் குடிமக்கள் என உணர்ந்தால் மட்டுமே காலனியாட்சிக்கு எதிரான போராட்டங்கள் வெற்றி பெறுமென்பதை இந்திய தேசிய காங்கிரஸ் நிர்வாகிகள் நன்குணர்ந்தனர்.
9. பிபின் சந்திரபால், பாலகங்காதர திலகர், லாலா லஜபதிராய் போன்ற ஆரம்பகால தேசியவாதிகள் மனுக்கள் எழுதுவது, மன்றாடிக் கேட்டுக்கொள்வது போன்றவற்றிற்கு மாறாக தீவிரமான அணுகுமுறைகளை பரிந்துரைத்தனர்.

3 Marks

5. 1. சென்னைவாசிகளின் சங்கத்தின் மனு 1853 மார்ச்சில் இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது.
2. இந்திய சீர்திருத்த தலைவரான H.D. செய்மோர் 1853 அக்டோபரில் சென்னை வந்தார்.
3. குண்டூர், கடலூர், திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய இடங்களைப் பார்வையிட்டார்.
4. 1853 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் கிழக்கு இந்திய கம்பெனி தொடர அனுமதி வழங்கியது.
5. இந்தியாவிலுள்ள ஆங்கிலேயருக்கு சொந்தமான பகுதிகள் மகாராணியாரின் நேரடிக் கட்டுப்பாட்டிற்கு மாற்ற வேண்டும் என்று கூறியது.

6. 1. இந்தியாவில் அச்சு இயந்திரம் அறிமுகம் செய்யப்பட்டமை மிக முக்கிய நிகழ்வாகும்.
2. நவீன சிந்தனைகளைப் பரப்ப மக்களுக்கு பத்திரிக்கைகள் உதவின.
3. பத்திரிகைகள் அரசியலை விமர்சனம் செய்யத் தொடங்கின. நாட்டினைப் பாதிக்கும் பல்வேறு பிரச்சனைகள் குறித்து மக்களிடம் பேசின.
4. தன்னாட்சி, மக்களாட்சி, குடிமை உரிமைகள், தொழில்மயமாக்குதல் போன்ற நவீன சிந்தனைகளை மக்களுக்குப் பரப்ப பத்திரிகைகள் உதவின.
5. தி இந்தியன் மிரர், தி இந்து, சுதேசமித்திரன் ஆகியன முக்கியத்துவம் வாய்ந்த பத்திரிகைகள் ஆகும்.

7. 1. 1815 - இல் சிலோன் ஆளுநர் சென்னை மாகாண ஆளுநருக்கு எழுதிய கடிதத்தில் பெருந்தோட்டங்களில் வேலை செய்யக் கூலிகளை அனுப்பிவைக்கக் கேட்டுக்கொண்டார்.
2. 1833, 1843 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட பஞ்சங்கள், அரசாங்கத்தின் தூண்டுதல் இல்லாமலேயே மக்கள் புலம் பெயர்ந்து செல்லக்கட்டாயப்படுத்தின.
3. ஒப்பந்தக் கூலித் தொழிலாளர் முறையின் கீழ் இலங்கையில் காபி, தேயிலைத் தோட்டங்களில் இந்தியர்கள் கூலிகளாக வேலை செய்யச் சென்றார்கள்.

8. 1. ஓர் அரசியல் சார்ந்த அமைப்பின் தேவை உணரப்பட்டது. அதன் விளைவாக மே 16,1884-இல் சென்னை மகாஜன சங்கம் நிறுவப்பட்டது.
2. தொடக்கவிழாவில் பங்குபெற்ற முக்கிய தலைவர்கள் ஜி. சுப்பிரமணியம், விஜயராகவாச்சாரி, அனந்தா சார்லு, ரங்கையா, பாலாஜிராவ், சேலம் ராமசாமி ஆகியவர்கள் ஆவார்கள்.

9. 1. இந்தியாவின் முதுபெரும் தலைவர் தாதாபாய் செல்வச்சுரண்டல் என்னும் கோட்பாட்டை முன் வைத்தார். அதில் எந்த நாடாக இருந்தாலும் வசூலிக்கப்பட்ட வரியை அந்நாட்டு மக்களின் நல்வாழ்விற்காகவே செலவு செய்ய வேண்டும்.
2. பிரிட்டிஷ் இந்தியாவில் ஆங்கிலேயர் வசூலிக்கும் வரி இங்கிலாந்தின் நலனுக்காகச் செலவு செய்யப்படுகிறது. தாயகக் கட்டணம் எனும் பெயரில் ஆண்டொன்றுக்கு 30 மில்லியன் பவுண்டுகள் நஷ்டம் ஏற்படுவதாக நௌரோஜி உறுதிபட கூறினார்.

2 Marks

10. **தேசியம்:** விரிவான தளத்தில் தேசியமென்பது ஒரு நாட்டிற்கு விசுவாசமாகவும் பக்தியோடும் இருத்தல் எனப் பொருள் கொள்ளப்படுகிறது. அது தனது நாட்டை ஏனைய நாடுகளைக் காட்டிலும் உயர்வான இடத்தில் வைத்துப் பார்த்து அல்லது ஏனைய நாடுகளுக்குப் போட்டியாக தனது நாட்டின் பண்பாடும் மற்றும் விருப்பங்களின் வளர்ச்சியில் சிறப்புக் கவனம் செலுத்தும் ஒரு தேசிய உணர்வு அல்லது மனப்போக்காகும்.

11. 1. 1859-60 இல் நடைபெற்ற "இண்டிகோ" புரட்சி கம்பெனியின் அடக்குமுறைக் கொள்கைக்கு எதிரான இந்திய விவசாயிகளின் ஒரு எதிர் வினையாகும்.
2. ஐரோப்பியர்களுக்குச் சொந்தமாயிருந்த நிலங்களில் இந்தியக் குத்தகை விவசாயிகள் அவுரியைப் பயிரிடக் கட்டாயப்படுத்தப்பட்டனர்.
3. சாயம் தயாரிக்க இச்செடிகள் அதிகம் தேவைப்பட்டது.

12. 1. ரிப்பன் வைஸ்ராயாக இருந்தபோது இல்பர்ட் மசோதா கொண்டுவரப்பட்டது.
2. இந்திய நீதிபதிகள் ஐரோப்பியர்களை விசாரிக்க அதிகாரம் பெற்றனர்.
3. இதை ஐரோப்பியர்கள் கடுமையாக எதிர்த்தார்கள்.
4. பின்னர் இது திருத்தம் செய்யப்பட்டது.

13.

அமைப்பு	வருடம் / இடம்	தோற்றுவித்தவர்
1. நிலக்கிழார்கள் அமைப்பு ஜமீன்தார் அமைப்பு.	1838 / கல்கத்தா	துவாரகாநாத் தாகூர்.
2. பிரிட்டிஷ் இந்திய சமூகம்	1839 / லண்டன்	வில்லியம் ஆடம்ஸ்
3. மெட்ராஸ் பூர்விக அமைப்பு	1852 / சென்னை	லஷ்மண சரசு செட்டி
4. பம்பாய் கழகம்	1852 / பம்பாய்	தாதாபாய் நௌரோஜி, தீன்ஷா வாச்சா
5. இந்திய லீக்	1875 / கல்கத்தா	சி. சிர்குமார் கோஷ்
6. மெட்ராஸ் மகாஜன சபா	1884 / மெட்ராஸ்	வீரராகவாச்சார்யா, ஜி. சுப்பிரமணிய ஐயர், பி. அனந்தாச்சார்லு

14. பிபின் சந்திரபால், பாலகங்காதர திலகர், லாலா லஜபதிராய், சுரேந்திரநாத் பானர்ஜி, தாதாபாய் நௌரோஜி, ஜி. சுப்பிரமணியம், விஜயராகவாச்சாரி, அனந்தா சார்லு, ரங்கையா, பாலாஜிராவ், சேலம் ராமசாமி ஆகியவர்கள் தொடக்ககால முக்கிய தேசியவாதிகள் ஆவார்கள்.

Multiple Choice Question

15. (a) 1915
16. (b) 1835

17. (d) அரவிந்தோ கோஷ்
18. (a) பாலகங்காதர திலகர்
19. (b)

A	B	C	D
3	1	4	2

20. (c) சென்னைவாசிகள் சங்கம் - 1852
21. (c) iii, iv, i, ii
22. (c) A.O. ஹியூம்
23. (d) W.C. பானர்ஜி
24. (c) தாதாபாய் நௌரோஜி
25. (c) கூற்று சரி. காரணம் தவறு
26. (d) இவை அனைத்தும்
27. (c) கோகலே
28. (a) வறுமைப்பற்றி
29. (c) 1835
30. (b) பிரம்மசமாஜம்
31. (d) கூற்று தவறு ஆனால் காரணம் சரி
32. (b) IV ,II ,I ,III
33. (b) கூற்று காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
34. (c) தாதாபாய் நௌரோஜி

QB 365 Study Material
QUESTION BANK 365